ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2469/18 - 2026 ජනවාරි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.01.01

*2469/18 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### தேருநர் இடாப்பு மீளாய்வு - 2026

தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்

2026 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை 2026, சனவரி மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிப்பதாக 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம் அல்லது சட்டம் என குறிப்பீடு செய்யப்படும்) 12(1) ஆம் பிரிவுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. தற்போது செல்லுபடியாகும் 2025 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு, 2025(1), 2025(2) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் (இதனகத்துப் பின்னர் "செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு" என குறிப்பீடு செய்யப்படும்) அல்லது அவற்றின் பகுதிகளின் பிரதிகள் பதிவு அலுவலர்களால் கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும்.

| *இடாப்பு அல்லது அவற்றின் பகுதிகளின் பிரதிகள் காட்சிப்படுத்தப்படும் அலுவலகங்கள்* | *காட்சிப்படுத்தப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பகுதிகள்* |
|---|---|
| மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் | தேர்தல் மாவட்டத்திற்கு / நிர்வாக மாவட்டத்திற்குரிய செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் முழுப் பிரதி |
| கிராம அலுவலர் அலுவலகங்கள் | கிராம அலுவலர் பிரிவின் செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் பகுதி |

03. இதற்கமைய ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்தின் தேருநராவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ள சகலருக்கும் தனது பெயரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்படும் தேருநர் இடாப்புக்களைப் பரிசீலித்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இது தவிர ec.lk/vrd தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்கு பிரவேசித்து பரிசீலிக்க முடியும். இந்த அறிவித்தலில் காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் (scan) செய்வதனூடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

04. 2026 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

05. 2025.10.31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு; 2025.10.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு; 2025.10.22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024(2) குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் 2026.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கும் 2025(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள பெயர்களை ஒன்றிணைத்து 2026 ஆம் ஆண்டிற்கான தேருநர்களைக் கணக்கெடுப்பதற்கான ஒன்றிணைந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

06. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளினதும் கிராம அலுவலர் தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலராக நடவடிக்கை மேற்கொள்வார். சந்தர்ப்பத்திற்கேற்ப சில மாவட்டங்களில் விசேட கணக்கெடுப்பு அலுவலர்களையும் ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

07. தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் செல்லும் பணி கீழே 08 ஆம் பந்தியின் பிரகாரம் 2026.01.01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

08. கணக்கெடுப்பு அலுவலர்கள் சகல வீடுகளுக்கும் வருவதில்லையென்பதோடு, சந்தர்ப்பத்திற்கேற்ப 2025 ஒன்றிணைந்த தேருநர் இடாப்பில் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அதாவது 2026 ஒன்றிணைந்த பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெயரொன்று அல்லது சில பெயர்கள் நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது 2026 ஒன்றிணைந்த பட்டியலில் குறிப்பிடப்படாத பெயரொன்று அல்லது சில பெயர்கள் உட்சேர்க்கப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் வருவார்கள். கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடுகளுக்கு வராவிட்டாலும் தனது வீட்டின் கீழ் பெயரொன்று /பெயர்கள் உட்சேர்க்கப்படல் அல்லது நீக்கப்படல் மேற்கொள்ளப்படுமாயின் மற்றும் செல்லுபடியாகும் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், வீட்டிலக்கம் என்பவற்றில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் கணக்கெடுப்பு அலுவலரைச் சந்தித்து இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளல் பிரதான குடியிருப்பாளரின் பொறுப்பாகும். எந்த விதமான திருத்தமும் மேற்கொள்ளப்படுவதிற்கில்லையாயின் தேருநர் ஒருவராக 2025 செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்காக பிரதான குடியிருப்பாளர் எந்த விதமான படிவமொன்றையும் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமில்லை.

09. 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொண்டுள்ள தேருநர் ஒருவர் மரணித்தல் அல்லது வதிவிடம் மாற்றமடைதல் அல்லது வேறு காரணத்தினால் 2026 ஆம் ஆண்டின் பதிவுக்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் அது பற்றியும் உங்களுடைய கணக்கெடுப்பு அலுவலருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு தகைமையீனத்திற்கு ஆளாகும் ஆட்களை "அ" பட்டியல்படுத்தி செல்லுபடியாகும் இடாப்பிலிருந்து நீக்கப்படும்.

10. எவரேனுமொருவர் 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொள்ளப்படாவிடின் அல்லது 18 வயது பூர்த்தியாகியமையின் அடிப்படையில் முதல் தடவையாக தேருநர் ஒருவராக பதிவு செய்துகொள்வதாயின் அல்லது வதிவிடம் மாற்றமடைதல் அல்லது வேறு காரணமொன்றினால் 2026 ஆம் ஆண்டில் தேருநர் ஒருவராக பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வாராயின், 2026/ER படிவமொன்றைப் பூர்த்திசெய்து கணக்கெடுப்பு அலுவலரிடம் கையளிக்கவும். மேலதிக விபரங்கள் 2026/ER படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளப்பட்டிராத ஆனாலும் தகைமைகளைப் பெற்றுக்கொள்கின்ற முகவரியொன்றின் கீழ் இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற நபர்களை "ஆ" பட்டியல்படுத்தி 2026 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளப்படும்.

11. 2026.02.01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்யும் அதாவது 2008.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த ஆட்கள் 2026 ஆம் ஆண்டிற்கான பிரதான தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

12. செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் அல்லது தேசிய ஆளடையாள அட்டை இலக்கத்தில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தேசிய ஆளடையாள அட்டையின்/பிறப்புச் சான்றிதழின் பிரதியுடன் கணக்கெடுப்பு அலுவலருக்கு அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

13. 2026 ஆம் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளின் போது கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று மீளாய்வுப் பணிகளை மேற்கொள்வதில்லையென்பதனால், தனது வீட்டிற்குரிய செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் நீக்கல்கள் மற்றும் 2026

தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட வேண்டிய பெயர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு சகல பிரசைகளிடமும் கோரிக்கை விடுக்கின்றது.

14. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய "அ", "ஆ" பட்டியல்களை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல் 2026.05.05 ஆம் திகதி பிரசித்தப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 28 நாட்களுக்குள் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் வேண்டும். 2026 மீளாய்வு சந்தர்ப்பத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆனாலும் ER படிவத்தில் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கு முடியாதுபோன ஆட்களுக்கு இந்தக் காலப் பகுதியினுள் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு முடியுமென்பதோடு, 2026 இடாப்புக்கு தகைமையைப் பெற்றுக்கொள்ளாத ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், அது தொடர்பாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கும் இந்தக் காலப் பகுதியில் வாய்ப்புண்டு. இதற்கான அச்சிடப்பட்ட படிவங்களை பிரிவின் கிராம அலுவலரிடமிருந்து அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு முடியும்.

15. எதிர்வரும் காலப் பகுதியில் அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கும் கீழ் குறிப்பிடப்படும் 06 குறைநிரப்பு இடாப்புக்களுக்காக YC படிவங்களூடாக தகவல்கள் சேகரித்துக்கொள்ளப்படும். குறைநிரப்பு பட்டியல்களை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றி எதிர்வரும் காலப் பகுதியில் பிரசித்தப்படுத்தப்படும் அறிவித்தல்களூடாக அறிவிக்கப்படும்.

15.1 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் குறைநிரப்பு தேருநர் இடாப்பு

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்ய வேண்டிய காலப் பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2026(1) | 2026.02.01 முதல் 2026.05.31 வரை | 2008.02.01 முதல் 2008.05.31 வரை |
| 2026(2) | 2026.06.01 முதல் 2026.09.30 வரை | 2008.06.01 முதல் 2008.09.30 வரை |
| 2026(3) | 2026.10.01 முதல் 2027.01.31 வரை | 2008.10.01 முதல் 2009.01.31 வரை |

* 2026.02.01 ஆந் திகதி முதல் 2027.01.31 ஆந் திகதி வரை 18 வயதைப் பூர்த்தி செய்கின்ற அதாவது 2008.02.01 ஆந் திகதி முதல் 2009.01.31 ஆந் திகதி வரையான காலப் பகுதியினுள் பிறந்தவர்கள் 2025 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் பதிவுக்காக கோரியிருந்தால் மற்றும் வதிவிடத்தில் மாற்றம் ஏற்படாவிட்டால் கிராம அலுவலரிடம் வினவி தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதோடு மீண்டும் விண்ணப்பித்தல் அவசியமில்லை.

15.2 2027 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் குறைநிரப்பு தேருநர் இடாப்பு

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்ய வேண்டிய காலப் பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2027(1) | 2027.02.01 முதல் 2027.05.31 வரை | 2009.02.01 முதல் 2009.05.31 வரை |
| 2027(2) | 2027.06.01 முதல் 2027.09.30 வரை | 2009.06.01 முதல் 2009.09.30 வரை |
| 2027(3) | 2027.10.01 முதல் 2028.01.31 வரை | 2009.10.01 முதல் 2010.01.31 வரை |

ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,
2026, சனவரி 01.

EOG 01-0005

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.